**ஜூலை – 22**

# TNPSC துளிகள்

- ஹரியானா மாநிலத்தின் குருகிராமில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கியப் பேரரசின் சௌத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் இந்திய வளாகத்தினை மத்தியக் கல்வித் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
  - பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒரு புதிய விதிமுறைகளின் கீழ், இந்தியாவில் அதன் வளாகத்தை நிறுவிய முதல் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் இதுவாகும்.
- அனைவரும் அணுகும் வகையிலான இடஞ்சார்ந்த தொழில்நுட்பங்களின் தனிச்சிறப்பு வாய்ந்தப் பயன்பாட்டிற்காக இந்தியத் தேசியக் கடல் சார் சேவை மையம் (INCOIS) 2025 ஆம் ஆண்டிற்கான தேசியப் புவிசார் பயிற்சியாளர் விருதைப் பெற்றுள்ளது.
  - INCOIS என்பது புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் (MoES) கீழ் இயங்கும் ஐதராபாத்தினை தலைமையிடமாகக் கொண்ட ஒரு தன்னிச்சையான அமைப்பு ஆகும்.
- அமெரிக்காவின் டெஸ்லா நிறுவனமானது மும்பையில் டெஸ்லா அனுபவ மையம் என்று அழைக்கப்படும் அதன் முதல் காட்சிக்கூடத்தை திறப்பதன் மூலம் அதிகாரப் பூர்வமாக இந்தியாவில் தனது நுழைவினை உறுதிப்படுத்தியுள்ளது.
  - சீனாவில் உள்ள டெஸ்லாவின் தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் Y மாதிரிக்கான முன்பதிவுகள் இங்கு தொடங்கப் பட்டுள்ளன.
- மகாராஷ்டிர முதல்வர், கட்சிரோலி மாவட்டத்தில் உள்ள கோன்சாரியில் அமைக்கப்பட உள்ள 4.5 MTPA உள்ளீடு திறன் கொண்ட விதர்பாவின் முதல் ஒருங்கிணைந்த எஃகு உற்பத்தி ஆலை அமைப்பதற்கான அடிக்கல்லினை நாட்டினார்.
  - இந்தத் திட்டமானது இந்தியாவின் மிகவும் நக்சல் பாதிப்புள்ள பகுதிகளில் ஒன்றில் தொடங்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## NAAGAM செயலி




- தமிழ்நாடு வனத்துறையானது உலக பாம்பு தினத்தன்று (ஜூலை 16) கிண்டியில் உள்ள குழந்தைகள் பூங்காவில் NAAGAM என்ற அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது.

- இந்த நிகழ்வில், 'தமிழ்நாட்டில் பொதுவாகக் காணப்படும் பாம்புகள்' என்ற சிறு புத்தக வெளியீடு மற்றும் கட்டமைக்கப்பட்ட பாம்பு மீட்புப் பயிற்சித் திட்டம் ஆகியவை இடம் பெற்றன.
- இந்த நிகழ்வில் பாம்பு மீட்பு மற்றும் வளங்காப்பில் ஆற்றியப் பங்களிப்பிற்காக பத்மஸ்ரீ விருது பெற்ற இருளர் பழங்குடியினத்தைச் சேர்ந்த வடிவேல் கோபால் மற்றும் மாசி சத்தியன் ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்தச் செயலியானது குடிமக்கள், பாம்புகள் வீடுகளில் நுழைவது குறித்து புகார்கள் அளிக்கவும், பயிற்சி பெற்ற பாம்பு மீட்பு வீரர்கள் விரைவாகவும், நெறிமுறையுடனும் நடவடிக்கை எடுக்க உதவும்.
- தமிழ்நாடு மாநிலத்தில் 142 பாம்பு இனங்கள் காணப்படுகின்றன.

## தமிழ்நாடு தினம் 2025 - ஜூலை 18




- தமிழ்நாடு மாநிலமானது, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மதராஸ் மாநிலம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.
- 1967 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று, மதராஸ் மாநிலச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- அப்போதைய தமிழக முதல்வர் C.N. அண்ணாதுரை தலைமையிலான அரசு, இந்த மாநிலத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றக் கோரி இந்த முடிவை மேற்கொண்டது.
- 1967 ஆம் ஆண்டில், மதராஸ் மாநிலத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும், மாநிலத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து குரல் எழுப்பி வாக்கெடுப்பில் ஒருமித்த வாக்கினை அளித்தன.
- சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து, 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் தேதியன்று விருதுநகரில் அவர் உயிரிழந்தார் என்ற நிலையில் இந்த கோரிக்கை எழுப்பப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டு விருதுநகரில் சங்கரலிங்கனாருக்காக உருவாக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தை தமிழக அரசு எழுப்பியது.
- 1969 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதியன்று மாநிலமானது தமிழ்நாடு என்று பெயர்

மாற்றம் செய்யப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டில், அப்போதைய தமிழக மாநில முதல்வர் எடப்பாடி K. பழனிசாமி தலைமையிலான தமிழக அரசு, மாநிலம் உருவானதைக் குறிக்கும் வகையில் நவம்பர் 01 ஆம் தேதியை தமிழ்நாடு மாநில உருவாக்க தினமாக அறிவித்தது.
- இருப்பினும், 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், அப்போதைய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு, மாநிலத்தின் மறு பெயரிடுதலைக் குறிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 18 ஆம் தேதியானது தமிழ்நாடு தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தது.

## கோயில் நுழைவு குறித்து சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு 2025

- சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் ஒரு நாட்டில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டை அனுமதிக்க முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.
- அது உடையார் பாளையம் தாலுக்காவில் உள்ள புதுக்குடி அய்யனார் கோயிலுக்குள் பட்டியலிடப் பட்ட சாதியினைச் சார்ந்த நபர்கள் நுழைவதைத் தடுக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய அரியலூர் காவல்துறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டது.
- அது தற்போது நடைபெறும் வருடாந்திரத் திருவிழா உட்பட, அனைத்து வகுப்பு மக்களும், அவர்களின் சாதியைப் பொருட்படுத்தாமல், எல்லா நேரங்களிலும் இக்கோயிலுக்குள் நுழைந்து கடவுளை வழிபட அனுமதிக்கப்படுவதை உறுதி செய்ய உத்தரவிட்டது.
- 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகாரச் சட்டம் ஆனது எந்தவொரு நபருக்கும் சாதியின் அடிப்படையில் கோயில் நுழைவு மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இயற்றப்பட்டது.




## சென்னை இதழியல் கல்வி நிறுவனம்

- சென்னை இதழியல் கல்வி நிறுவனத்திற்கு (CIJ) தமிழக அரசு ஆனது 7.75 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- இந்த நிறுவனமானது 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
- தி இந்து இதழின் முன்னாள் தலைமை ஆசிரியரும், கஸ்தூரி அண்ட் சன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநருமான N. ரவி, இந்த CIJ நிறுவன வாரியத்தின் தலைவராக

நியமிக்கப்பட்டுள்ளார்.

- தி இந்து நிறுவனத்தின் முன்னாள் வாசகப் பதிப்பாசிரியர் A.S. பன்னீர்செல்வம் இந்த நிறுவனத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.



## 2024/25 ஆம் ஆண்டு சுவச் சர்வேக்சன் கணக்கெடுப்பில் தமிழ்நாடு

- 3 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலான மக்கள் தொகை கொண்ட 95 நகரங்களின் கணக்கெடுப்பில் திருச்சி மாநகராட்சி 49வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பில், நாடு முழுவதும் உள்ள 446 முக்கிய நகரங்களில் திருச்சி மாநகராட்சி 112வது இடத்தைப் பிடித்தது.
- திருச்சியானது இந்தப் பிரிவில் மாநில அளவில் முதலிடத்திலும் மற்றும் ஒட்டு மொத்த மாநிலத் தரவரிசையில் ஒன்பதாவது இடத்தையும் பிடித்துள்ளது.
- திருச்சி மாநகராட்சியை ODF++ (திறந்தவெளி கழிப்பிடமற்ற ++) சாதனை கொண்ட மாவட்டமாக அமைச்சகம் சான்றளித்துள்ளது.
- கோயம்புத்தூர் நகரம் இதில் 28வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 35வது இடத்தில் இருந்த அந்த மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- மேலும் இந்த நகரம் ஆனது தற்போது 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தமிழ்நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அதன் முந்தைய ODF நிலையிலிருந்து மேம்படுத்தப் பட்டு ODF++ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த சான்றிதழ், திறந்தவெளியில் மலம் கழித்தல் நடவடிக்கை இல்லை என்பதையும், தூய்மையான மற்றும் செயல்பாட்டில் உள்ள பொது கழிப்பறைகளை பேணுவதையும் உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், கழிவுநீர் வலையமைப்புகளுடன் இணைக்கப் படாத பகுதிகள் உட்பட, மலக் கழிவுகளை மிகப் பாதுகாப்பான முறையில் சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் அகற்றுவதற்கான திறன் மிக்க அமைப்புகளையும் கொண்டு உள்ளது என்பதைக் குறிக்கிறது.
- 10 லட்சத்திற்கும் மிக அதிகமான மக்கள்தொகை கொண்ட நகர்ப்புறத்தின் உள்ளாட்சி அமைப்புகளில் (ULBs) இடம் பெற்றுள்ள 40 இடங்களில் சென்னை 38வது இடத்தையும், தமிழ்நாட்டில் ஒட்டு மொத்தமாக 104வது இடத்தையும் பிடித்தது.
- இந்தூர் 7 நட்சத்திரத் தரத்தில் குப்பைகளற்ற நகரம் (GFC) என்ற தரத்தினைப் பெற்றது, என்ற நிலையில் சென்னை எந்த தரத்தினையும் பெறவில்லை.

- கோயம்புத்தூர் 28வது இடத்தைப் பிடித்தது (10 லட்சத்திற்கும் அதிகமான ஒரு மக்கள் தொகை பிரிவு)
- மதுரை 40வது இடத்தைப் பிடித்தது (இப்பட்டியலில் கடைசி இடம்)
- திருச்சி 49வது இடத்தைப் பிடித்தது (3 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள் தொகைப் பிரிவு)
- 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுவச் சர்வேக்சன், பல்வேறு சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை அளவுருக்கள் குறித்து நகர்ப்புறத்தின் உள்ளாட்சி அமைப்புகளை மதிப்பிடுவதற்காக ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.
- இது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி நடத்தப்படுகிறது.

**SWACHH SURVEKSHAN 2024-25**

| TN Cities | Marks | National rank | Category |
|---|---|---|---|
| Coimbatore | 8,347 | 28 | 10 lakh+ |
| Trichy | 8,239 | 49 | 3-10 lakh |
| Chennai | 6,822 | 38 | 10 lakh+ |
| Madurai | 4,823 | 40 | 10 lakh+ |

# தேசியச் செய்திகள்

## விவாகரத்து வழக்குகளில் வாழ்க்கைத் துணைவர் குறித்த இரகசியப் பதிவுகள்


- வாழ்க்கைத் துணைவர்களுக்கிடையே மிகவும் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்ட சில உரையாடல்களை விவாகரத்து வழக்குகள் உள்ளிட்ட திருமணத் தகராறுகளில் ஆதாரமாகப் பயன்படுத்தலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் (விபோர் கார்க் எதிர் நேகா) தீர்ப்பளித்தது.
- வாழ்க்கைத் துணைவர்கள் ஒருவரையொருவர் உளவு பார்ப்பது திருமண உறவுகள் வலுவாக இல்லை என்பதற்கான ஒரு சான்றாகும், எனவே அதை நீதித்துறை இந்த நடவடிக்கைகளில் பயன்படுத்தலாம்.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் ஆனது, வாழ்க்கைத் துணைவர்களுக்கு இடையேயான இரகசிய உரையாடல்கள் சாட்சியச் சட்டத்தின் 122வது பிரிவின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன என்றும் அவற்றை நீதித்துறை நடவடிக்கைகளில் ஆதாரமாகப் பயன்படுத்த முடியாது என்றும் தீர்ப்பளித்தது.
- ஊழல் விசாரணையில் இரகசியமான தொலைபேசிப் பதிவுகள் ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப் பட்ட 1973 ஆம் ஆண்டு வழக்கை உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.
- இது திருமணத் தகராறுகளுக்கும் என்று இந்தக் காரணத்தை விரிவுப்படுத்தியது.
- உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ஆனது இந்தியச் சட்டத்தில் வாழ்க்கைத் துணைவரின் சிறப்புரிமை மற்றும் தனியுரிமை பற்றிய ஒரு புரிதலை நன்கு மாற்றி அமைக்கிறது.

***பின்னணி***

- 2017 ஆம் ஆண்டில் இந்தியாவில் தனியுரிமை ஓர் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப் படுவதற்கு முன்னதாக, 1872 ஆம் ஆண்டு சாட்சியச் சட்டம் இயற்றப்

பட்டது.

- வாழ்க்கைத் துணைவரின் சிறப்புரிமையானது திருமணமான துணைவர்கள் இடையேயான தனிப்பட்ட தகவல்தொடர்பைப் பாதுகாக்கிறது.
- குற்றவியல் வழக்குகளில் ஒரு நபர் தனது வாழ்க்கைத் துணைக்கு எதிராக சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தப்படுவதை இது தடுக்கிறது.




## 14473 - உதவி எண்

- 'இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதார சுற்றுச்சூழல் அமைப்புக்கான தேசிய நடவடிக்கை (NAMASTE) தினத்தன்று' (ஜூலை 16) கழிவு சேகரிப்பாளர்களுக்கான உதவி எண்ணை (14473) மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- NAMASTE திட்டம் என்பது எந்தவொரு துப்புரவுப் பணியாளரும் தங்கள் கைகளால் சாக்கடைகள் மற்றும் மலம் மக்குதல் தொட்டிகளை சுத்தம் செய்யும் ஆபத்தான வேலையைச் செய்ய வேண்டியதில்லை என்பதை வலியுறுத்தும் அரசாங்கத்தின் ஒரு மனிதாபிமான அணுகுமுறையாகும்.
- இந்தத் திட்டமானது, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகங்களால் கூட்டாகத் தொடங்கப்பட்டது.
- இது தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தினால் (NSKFDC) செயல்படுத்தப்படுகிறது.
- இது 2023-24 ஆம் நிதியாண்டு முதல் 2025-26 ஆம் நிதியாண்டு வரையில் என மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.
- இந்தத் திட்டமானது கழிவுநீர் மற்றும் மலம் மக்குதல் தொட்டியைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு (SSWs) பல உரிமைகளை வழங்குகிறது.
- துப்புரவுப் பணியாளர்களின் விவரங்கள் எண்ணிமச் செயலி மூலம் சேகரிக்கப்பட்டு,

PPE கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுக்கான அணுகல், தொழில் பாதுகாப்புப் பயிற்சி, சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் சுகாதாரத் துறையில் வாழ்வாதார வாய்ப்புகள் ஆகியவை மானிய விலையிலான வசதிகள் மூலம் வழங்கப்படும்.



NAMASTE Day was celebrated on 16th July 2025 at Mercury Hall, Indira Gandhi Pratishthan, Lucknow, in the esteemed presence of Shri B. L. Verma, Hon'ble Minister of State, Ministry of Social Justice and Empowerment, Government of India.

## SIMBEX 2025 – 32வது பயிற்சி




- இந்த மாத இறுதியில் சிங்கப்பூரில் நடைபெற உள்ள SIMBEX எனப்படும் சிங்கப்பூர்-இந்தியா இடையிலான 32வது இருதரப்பு கடல்சார் பயிற்சியில் இந்தியக் கடற்படை பங்கேற்க உள்ளது.
- இது முன்னதாக லயன் கிங் பயிற்சி என்று அழைக்கப்பட்டது.
- இந்தப் பயிற்சியானது, இந்தியாவின் SAGAR கொள்கை (இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) மற்றும் கிழக்கு நாடுகளுக்கு ஏற்ற


வகையிலான செயல்பாட்டுக் கொள்கை ஆகியவற்றினை ஆதரிக்கிறது.

❖ முதல் ASEAN - இந்தியா கடல்சார் பயிற்சியானது 2023 ஆம் ஆண்டில் நடைபெற்றது மற்றும் சிங்கப்பூர் கடற்படையால் இணைந்து நடத்தப்பட்டது.

❖ இந்தியக் கடற்படையின் சமீபத்திய முக்கிய HARD மற்றும் SAR (தேடல் மற்றும் மீட்பு) நடவடிக்கைகள் அரேபியக் கடலில் மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்தன.

❖ 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சர்வதேசக் கடற்படை மதிப்பாய்வு, MILAN எனும் பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சி, மற்றும் விசாகப்பட்டினத்தில் IONS தலைவர்களின் மாநாடு போன்ற முக்கிய எதிர்கால கடல்சார் நிகழ்வுகளை இந்தியா நடத்த உள்ளது.

## இராம் சரண் & பிறர் மற்றும் சுக்ராம் & பிறர் இடையிலான வழக்கு




❖ இராம் சரண் & பிறர் மற்றும் சுக்ராம் & பிறர் இடையிலான வழக்கில், பழங்குடியினப் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் பெண் வாரிசுரிமையை மறுக்கச் செய்யும் ஒரு மேல் முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

❖ பழங்குடியினப் பெண்களுக்கு மூதாதையர் சொத்தில் சம உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

❖ பாலினத்தின் அடிப்படையில் மட்டுமே பெண் வாரிசுகளை விலக்குவது பாகுபாடு காட்டும் செயல் மற்றும் அது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று நீதிமன்றம் கூறியது.

❖ பழங்குடியினப் பெண்களை வாரிசுரிமையிலிருந்து விலக்குவது அரசியலமைப்பின் 14 மற்றும் 15 வது சரத்துகளை மீறுகிறது.

❖ 38 மற்றும் 46வது சரத்துகளுடன் சேர்த்து ஆராய்ந்தால், பெண்களுக்கு எதிராக எந்தப் பாகுபாடும் இல்லை என்பதை உறுதி செய்வதில் அவை அரசியலமைப்பின் கூட்டு நெறிமுறைகளை சுட்டிக்காட்டுகின்றன.

❖ 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டமானது பட்டியலிடப்பட்ட பழங்குடியின மக்களுக்குப் பொருந்தாது என்றாலும், பழங்குடியினப் பெண்களை வாரிசுரிமையில் இருந்து தானாகவே விலக்குவதை அது குறிக்காது.


❖ பெண்களுக்கு வாரிசுரிமையைத் தடுக்கும் வகையில் எந்தவொரு நிரூபிக்கப்பட்ட தடை செய்வதற்கான ஒரு வழக்கமோ அல்லது வகுக்கப்பட்ட ஒரு சட்டமோ இல்லாத நிலையில், "நீதி, சமத்துவம் மற்றும் உறுதியான நீதி" என்ற கொள்கை மேலோங்க வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.

❖ 1875 ஆம் ஆண்டு மத்திய மாகாணச் சட்டத்தை ரத்து செய்வது தொடர்பான தவறான புரிதலையும் இந்தத் தீர்ப்பு தெளிவுபடுத்தியது.

- இதில் உச்ச நீதிமன்றத்தினால் மேற்கோள் காட்டப்பட்ட பிற தீர்ப்புகள் - திருமதி சர்வாங்கோ மற்றும் திருமதி உர்ச்சமாஹின் இடையிலான வழக்கு (2013) மற்றும் திரித் குமார் மற்றும் தாதுராம் இடையிலான வழக்கு (2024) ஆகியனவாகும்.
- இது விசாரணை நீதிமன்றம், முதன்மை மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் சத்தீஸ்கர் மாநில உயர் நீதிமன்றத்தினால் ஒரே நேரத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை மாற்றுவதாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### ஐக்கியப் பேரரசில் வாக்களிக்கும் வயது குறைப்பு




- தொழிலாளர் கட்சி தலைமையிலான ஐக்கியப் பேரரசு அரசாங்கம் ஆனது அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னதாக வாக்களிக்கும் வயதை 16 ஆகக் குறைக்கும் திட்டத்தை அறிவித்தது.
- 1969 ஆம் ஆண்டில் வாக்களிக்கும் வயதானது 21 வயதிலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்ட பிறகு வாக்களிக்கும் வயதில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய மாற்றமாகும்.
- முன்மொழியப்பட்ட இச்சட்டத்தின் கீழ், 14 வயதில் இருந்து வாக்களிப்பிற்கானப் பதிவு செயல்முறைகள் தொடங்கும்.
- இந்த முக்கிய மாற்றமானது, ஏற்கனவே 16 மற்றும் 17 வயதுடையவர்கள் வாக்களிக்க அனுமதிக்கும் ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றிற்கு இணங்க ஐக்கியப் பேரரசு முழுவதுமான தேர்தல்களை மாற்றுகிறது.
- வாக்காளர் அடையாள அட்டை அமைப்பு தற்போது வாக்குச் சாவடிகளில் ஐக்கியப் பேரரசில் வழங்கிய வங்கிக் கடன் மற்றும் பற்று அட்டைகளையும் ஏற்றுக் கொள்ளும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### 'கிராண்டலா' பிரகாசமான நீல நிறப் பறவை

- மிக அரிதான 'கிராண்டலா' எனும் பிரகாசமான நீல நிறப் பறவையானது சமீபத்தில் இமாச்சலப் பிரதேசத்தின் சைஞ்ச் பள்ளத்தாக்கில் தென்பட்டது.
- இது கிராண்டலா இனத்தில் உள்ள ஒரே இனமாகும்.
- இது ஒரு மரங்களில் வாழ்கின்ற பூச்சிகளை உண்ணும் பறவையாகும்.


- இது பூடான், இந்தியா, மியான்மர் மற்றும் நேபாளம் ஆகிய பகுதிகளிலும் அதே போல் திபெத் மற்றும் சீனாவின் பிற பகுதிகளிலும் காணப்படுகிறது.
- இது மிக முதன்மையாக இமயமலையின் தாழ் மட்டத்திலிருந்து நடுத்தர உயரங்களில் வரையில், வட கிழக்கு இந்தியத் துணைக்கண்டம் மற்றும் அதற்கு அருகிலுள்ள சில பகுதிகளில் காணப்படுகிறது.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் கீழ் 'தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது.




## அண்டார்டிக்காவில் உள்ள பறவைகளின் வட்டார இயல்பு

- அண்டார்டிக்கா மற்றும் தெற்கு அரைக்கோளத்தில் உள்ள பறவைகளின் வட்டார இயல்பு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது அவற்றின் தனித்துவமானப் பல்லுயிர்த் தன்மையினை எடுத்துக்காட்டுகிறது.
- வட்டார இயல்பு என்பது குறிப்பிட்ட புவியியல் பகுதிகளில் மட்டுமே அந்த இனங்கள் காணப்படும் இயல்பு ஆகும்.
- கருப்பு நிறக் கண்கள் மற்றும் கருப்பு நிற அலகைக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க வெண்ணிறக் கடற்பறவையானது, தென் துருவத்தில் இதுவரை தென்பட்ட மூன்று பறவை இனங்களில் ஒன்றாகும்.
- உண்மையில், பூமியில் இந்தப் பறவை வாழும் ஒரே இடம் அண்டார்டிக்கா மட்டுமே ஆகும்.
- உலகளாவிய இனங்களின் வட்டார இயல்பின் பரவல்கள் மிகச் சரியாக வரையறுக்கப் படாததற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.
- மிக முதலாவதாக, வட்டார இயல்பினைக் கணக்கிடப் பயன்படுத்தப்படும் மிகவும் ஒரு பொதுவான முறையானது, ஒட்டு மொத்தமாக அதிக இனங்கள் உள்ள இடங்களுக்கு மிக அதிக மதிப்புகளைக் கொடுக்க முனைகிறது என்ற நிலையில் இது இனங்களின் செழுமை என்று அழைக்கப்படுகிறது.

- கூடுதலாக, பன்முகத் தன்மை பற்றிய உலகளாவியப் பெரும் ஆய்வுகள் பெரும்பாலும் ஒப்பீட்டளவில் இனங்கள் குறைவாக உள்ள பகுதிகளை விலக்குகின்றன.




- ஒரு சில இனங்களை மட்டுமே கொண்ட தளங்கள் விடுபட்டால், இது மற்ற அனைத்து தளங்களுக்கான வட்டார இயல்பின் மதிப்பீடுகளை பாதிக்கிறது.
- தெற்கு அரைக்கோளத்தில் வடக்கு அரைக் கோளத்தை விட குறைவான நிலப்பரப்பும் அதிக கடல் பரப்பும் உள்ளன.
- பரந்த பெருங்கடல்களால் உருவான இந்த பிரிவு உயிரினங்களின் எல்லைகள் மற்றும் பரவலைக் கட்டுப்படுத்துகிறது.
- இதன் விளைவாக, இந்தத் தனிமைப்படுத்தப் பட்ட நிலப்பரப்புகளில் உள்ள பறவைக் குழுக்களில் குறைவான இனங்களே காணப்படுகின்றன இதனால் வட்டார இயல்புத் தன்மை அதிகரிக்கிறது.
- இதற்கு நேர்மாறாக, வடக்கு அரைக்கோள இனங்கள் பரந்தப் பரவலை அனுமதிக்கும் பெரிய, இணைக்கப்பட்ட நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளன.
- வடக்கு அரைக்கோள இனங்கள் தங்கள் எல்லைகளைத் தொடர்ச்சியான நிலத்தில் இருந்து குளிரான பகுதிகளுக்கு மாற்றலாம்.
- தெற்கு அரைக்கோள இனங்கள் பெருங்கடல்கள் மற்றும் அண்டார்டிக்கா போன்ற பொருத்தமற்ற வாழ்விடங்களால் தடுக்கப்படுகின்றன.
- பன்முகத் தன்மையின் அனைத்து அம்சங்களிலும் வடக்கு அரைக்கோள இனங்களை விட தெற்கு அரைக்கோள இனங்கள் அதிக வட்டார இயல்பு தன்மை விகிதங்களைக் கொண்டுள்ளன என்று கண்டறியப்பட்டது.
- அண்டார்டிக்காவின் துணைத் தீவுகள் மற்றும் உயர் ஆண்டஸ் பகுதிகள், அத்துடன் ஆஸ்திரேலியா, அயோடெரோவா நியூசிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்காவில் உள்ள பல பகுதிகள், வட்டார இயல்புத் தன்மை வாய்ந்த உலகளாவிய இடங்களாக தனித்து நிற்கின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஹுருன் அமைப்பின் 30 வயதிற்குட்பட்ட தொழில்முனைவோர் பட்டியல் 2025

- செப்டோவின் இளம் நிறுவனர்களான கைவல்யா வோஹ்ரா மற்றும் ஆதித் பாலிச்சா, முதலாவது அவென்டஸ் வெல்த் - ஹுருன் இந்தியா அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான 30 வயதிற்குட்பட்ட தொழில்முனைவோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர்.
- இந்தப் பட்டியல் ஆனது அவென்டஸ் மற்றும் ஹுருன் இந்தியா அமைப்பின் பரந்த "Uth -குறிப்பிட்ட வயதிற்குட்பட்டவர் பட்டியல் தொடரின்" அறிமுகத்தைக் குறிக்கிறது.
- இது 35 வயதிற்குட்பட்ட மற்றும் 40 வயதிற்குட்பட்ட குழுக்களுக்கான எதிர்காலத்தின் பதிப்புகளையும் கொண்டிருக்கும்.
- இந்த ஆண்டு குழுவில் தொழில்நுட்பம், சில்லறை விற்பனை, சுகாதாரம், விண்வெளி, தளவாடங்கள், நிதித் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் முதல் முறையான நிறுவனர்கள் மற்றும் மரபார்ந்த தலைவர்கள் உள்ளனர்.
- மற்ற இளம் நபர்களில் A.V.R. ஸ்ரீ ஸ்மரன் (A.V.R. ஸ்வர்ண மஹால் ஜுவல்லர்ஸ்), அர்ஜுன் தேஷ்பாண்டே (ஜெனரிக் ஆதார்), மற்றும் மிஹிர் மெண்டா (R.M.Z.), திகந்தராவின் ராகுல் ராவத் மற்றும் ஸ்விஷ் நிறுவனத்தின் இணை நிறுவனர்கள் உஜ்வால் சுகேஜா, சரண் S மற்றும் அனிகேத் ஷா ஆகியோர் அடங்குவர்.


| Rank | Name | Age | Company | Residence |
|---|---|---|---|---|
| 1 | Kaivalya Vohra | 22 | Zepto | Mumbai, Maharashtra |
| 2 | Aadit Palicha | 22 | Zepto | Mumbai, Maharashtra |
| 3 | AVR Shree Smaran | 22 | AVR Swarna Mahal Jewellers | Salem, Tamil Nadu |
| 4 | Arjun Deshpande | 22 | Generic Aadhaar | Thane, Maharashtra |
| 5 | Shiva A. Sankeshwar | 23 | Vijayanand Travels | Hubballi, Karnataka |
| 6 | Ujjwal Sukheja | 24 | Swish | Bengaluru, Karnataka |
| 7 | Saran S | 24 | Swish | Tiruchirappalli, Tamil Nadu |
| 8 | Aniket Shah | 25 | Swish | Ahmedabad, Gujarat |
| 9 | Rahul Rawat | 25 | Digantara | Phagwara, Punjab |
| 10 | Mihir Menda | 25 | RMZ | Boston, Massachusetts – United States |

## உலகளாவிய ஈரநிலக் கண்ணோட்டம் 2025

- இது ஈரநிலங்கள் தொடர்பான உடன்படிக்கை அதாவது ராம்சர் உடன்படிக்கைக்கான (1971) செயலகத்தினால் வெளியிடப்பட்டது.
- ஜூலை 23-31 ஆகிய தேதிகளில் ஜிம்பாப்வேயில் திட்டமிடப்பட்டுள்ள ராம்சர் ஈர நிலங்கள் தொடர்பான உடன்படிக்கையின் (COP15) பங்குதார நாடுகளின் மாநாட்டின் 15வது கூட்டத்திற்கு சில நாட்களுக்கு முன்னதாக இந்த அறிக்கை வெளிவருகிறது.
- இந்தச் சரிவின் பெரும் முக்கிய இயக்கிகளாக நகரமயமாக்கல் மற்றும் தொழில்துறை மேம்பாட்டினை இது எடுத்துக்காட்டுகிறது.
- ஆப்பிரிக்காவின் ஈரநிலங்கள் ஆனது உலகளவில் மிகவும் தரமிழந்தவையாகவும்,

அத்தியாவசிய வளங்களுக்காக மில்லியன் கணக்கானவர்கள் அவற்றை மிக நன்கு சார்ந்திருக்கும் நிலையிலும் உள்ளன.

- ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் ஆகியப் பகுதிகளில் குறிப்பாக தரமிழப்பின் அளவு அதிகமாக உள்ளது.
- ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஓசியானியாவில் இதே அதிகரிப்பு பதிவு செய்யப் பட்ட போதிலும் இது நிகழ்ந்துள்ளது.
- ஈரநிலங்கள் ஆனது பூமியின் மேற்பரப்பில் ஆறு சதவீதத்தை மட்டுமே உள்ளடக்கி இருந்தாலும், உலக நாடுகளானது ஆண்டுதோறும் சுமார் 0.52 சதவீத விகிதத்தில் ஈர நிலங்களை இழந்து வருகிறது.
- இது உலக நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.5 சதவீதத்திற்குச் சமமான மதிப்பினைக் கொண்டுள்ளது.
- ராம்சர் உடன்படிக்கையின் முக்கிய உத்தி சார் இலக்குகள் குன்மிங்-மாண்ட்ரியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பு (KM-GBF) இலக்குகளுடன் ஒத்துப் போகின்றன.
- ராம்சர் என்பது ஈரநிலங்கள் மற்றும் அவற்றின் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முறையாகப் பயன்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை வழங்கும் ஒரு அரசுகளுக்கு இடையேயான ஒப்பந்தமாகும்.
- இந்தியா 1982 ஆம் ஆண்டில் இந்த உடன்படிக்கையினை அங்கீகரித்தது.




# இதரச் செய்திகள்

## 57வது சர்வதேச வேதியியல் ஒலிம்பியாட் போட்டி 2025 - ஐக்கிய அரபு அமீரகம்

- துபாயில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச வேதியியல் ஒலிம்பியாட் (IChO) போட்டியில் இந்திய மாணவர் அணியானது இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.
- உக்ரைன், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் இஸ்ரேல் போன்ற சில நாடுகளுடன் இணைந்து பங்கேற்கும் 90 நாடுகளில் இந்தியா 6வது இடத்தில் இடம்பெற்றுள்ளது.
- இந்த ஆண்டு IChO போட்டியில் இந்தியா 26வது முறையாகப் பங்கேற்றுள்ளது.

- தங்கப் பதக்கங்களை மகாராஷ்டிராவின் ஜல்காவோனைச் சேர்ந்த தேவேஷ் பங்கஜ் பையா மற்றும் தெலுங்கானாவின் ஐதராபாத்தைச் சேர்ந்த சந்தீப் குச்சி ஆகியோர் வென்றனர்.
- வெள்ளிப் பதக்கங்களை ஒடிசாவின் புவனேஷ்வரைச் சேர்ந்த தேபடத்த பிரியதர்ஷி மற்றும் புது டெல்லியைச் சேர்ந்த உஜ்வால் கேசரி ஆகியோர் வென்றனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★